செ.வெ.எண்: 08 நாள்: 04.12.2024

# பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு அரசு குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் கீழ், மிசன் வாட்சாலயா (Mission Vatsalya) வழிகாட்டுதல் நெறிமுறைகளின் படி மாவட்ட ஆட்சித்தலைவரை தலைவராக கொண்டு இயங்கி வரும் அரியலூர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு அலுவலகத்தில் காலியாக உள்ள பாதுகாப்பு அலுவலர் நிறுவனம் சாராதது (Protection Officer Non Institutional Care) 1 தற்காலிக பணியிடத்திற்கு (1 வருடகால ஒப்பந்த அடிப்படையில்) விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**கல்வித்தகுதி:** முதுகலையில் அங்கிகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தில் (Recognized University) சமூகப்பணி (Social Work) / சமூகவியல் (Sociology) / குழந்தைகள் வளர்ச்சி (Child Development) / மனித உரிமை பொது நிர்வாகம் (Human Rights Public Administration) / உளவியல் (Psychology) / மனநலம் (Psychiatry) / சட்டம் (Law) / பொது சுகாதாரம் (Public Health) / சமூகவள மேலாண்மை (Community Resource Management) ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை படித்திருக்க வேண்டும்.

**அல்லது**

இளங்கலையில் அங்கிகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தில் (Recognized University) சமூகப்பணி (Social Work) / சமூகவியல் (Sociology) / குழந்தைகள் வளர்ச்சி (Child Development) / மனித உரிமை பொது நிர்வாகம் (Human Rights Public Administration) / உளவியல் (Psychology) / மனநலம் (Psychiatry) / சட்டம் (Law) / பொது சுகாதாரம் (Public Health) / சமூகவள மேலாண்மை (Community Resource Management) / பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சி களப்பணியில் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை (Implementation, monitoring and supervising in the preferably I the field of Women & Child Development) / சமூகநலம் (Social Welfare) ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை படித்திருக்க வேண்டும் மற்றும் திட்டங்கள் உருவாக்குவதில் 2 ஆண்டுகள் முன் அனுபவம் பெற்றவராகவும் மேலும் கணினி இயக்குவதில் திறமை வாய்ந்தவராக இருத்தல் வேண்டும். **வயது வரம்பு 42 க்குள் இருத்தல் வேண்டும்.**

இப்பணியிடத்திற்கு **தொகுப்பூதியம் ஒரு மாதத்திற்கு - ரூ.27,804/-** மேற்கண்ட தகுதிகள் பெற்றிருக்க கூடிய தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பத்தினை https://ariyalur.nic.in என்ற மாவட்ட இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பத்தினை **18.12.2024** அன்று மாலை 05.00 மணிக்குள் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, இரண்டாவது தளம், அரசு பல்துறை வளாகம், ஜெயங்கொண்டம் சாலை, அரியலூர்- 621704. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் பதவி குறித்த தகவல்களுக்கு மிசன் வாட்சாலயா (Mission Vatsalya) வழிகாட்டுதல் நெறிமுறைகளை பார்த்து தெரிந்து கொள்ளலாம் என **அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பொ.இரத்தினசாமி, இ.ஆ.ப., அவர்களால்** தெரிவிக்கப்பட்டுள்ளது.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**